தொழில் திணைக்களம் - ஊழியர் சேமலாப நிதி

EMPLOYEES' PROVIDENT FUND - DEPARTMENT OF LABOUR

## மரணமடைந்த அங்கத்தவரது ஊ.சே.நி. நன்மைக் கொடுப்பனவைக் கோருதல் - அறிவுறுத்தல்கள்

"எல்" விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பிக்கும்போது பின்வரும் விடயங்களில் உங்களது கவனத்தைச் செலுத்தி பிழைகளின்றி உரிய ஆவணங்களுடன் சமர்ப்பிக்கும்படி தயவாகக் கேட்டுக்கொள்கிறேன்

### பொது அறிவுறுத்தல்கள்

☐ 1. ஊழியர் சேமலாப நிதியை பிணையாக வைத்து கடன் ஏதாவது பெறப்பட்டிருந்தால், கடன் பெற்ற வங்கியிலிருந்து அல்லது உரிய தொழில் அலுவலகத்திலிருந்து கையெழுத்திடப்பட்ட "கடன் 14" படிவம்.

☐ 2. A B H படிவங்கள் பூர்த்திசெய்யப்பட்டுப் பதிவுசெய்யப்பட்டிருக்காத சந்தர்ப்பத்தில் ஏற்னவே தரப்பட்டிருக்கும் அங்கத்துவ இலக்கத்தை / இலக்கங்களை வழங்கிய நிறுவனத்தில் / நிறுவனங்களில் கடமையாற்றியதற்கான சேவைக் கடிதம் / கடிதங்கள் அல்லது உரிய நியமனக் கடிதம் / கடிதங்கள்.

☐ 3. தற்காலிக அங்கத்துவ இலக்கம் வழங்கப்பட்டிருப்பின், தற்காலிக இலக்கம் 90000 இலிருந்து ஆரம்பிக்கும் தொகுதிக்கு கொடுப்பனவு செலுத்தப்பட்டிருப்பின், அதனை உறுதிப்படுத்துவதுடன், நிரந்தர இலக்கத்துடனான கடிதமொன்றை வேலை செய்த நிறுவனத்திலிருந்து பெற்று, இலங்கை மத்திய வங்கிக்குச் சமர்ப்பித்து உரிய பங்களிப்பை அவ்விலக்கத்திற்கு மாற்ற நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

☐ 4. அங்கத்தவரது ஊ.சே.நி. தொகையானது ரூ. 4 மில்லியனுக்கும் அதிகமானதாக இருப்பின், அதேவேளை பின்னுரித்தாளரது பெயர் குறிப்பிடப்படாதிருக்கும்போது, நீதிமன்றில் வழக்கொன்று தொடரப்பட்டுப் பெறப்பட்ட சொத்தைப் பிரிப்பதற்கான உத்தரவு முன்னளிக்கப்பட வேண்டும்.

☐ 5. அங்கத்தவரது மரணச் சான்றிதழில் உள்ள பெயர், விவாக / பிறப்புச் சான்றிதழிலுள்ள பெயர் மற்றும் மத்திய வங்கியின் ஆவணத்திலுள்ள பெயர் ஒன்றுடனொன்று மாறுபட்டால், அவர் சேவைபுரிந்த நிறுவனத்தினால் அவரது பெயரிலுள்ள மாறுபாடுகளை உறுதிப்படுத்தி வழங்கப்பட்ட சான்றுக் கடிதம்.

☐ 6. கிராம சேவை உத்தியோகத்தரால் இது தொடர்பில் வழங்கப்படும் சகல ஆவணங்களும் பிரதேசச் செயலாளரால் மேலொப்பம் இடப்பட்டிருக்க வேண்டும்.

☐ 7. வெளிநாட்டில் இருக்கும்போது மரணமடைந்த அங்கத்தவரது நன்மைக் கொடுப்பனவைக் கோரும்போது, வெளிவிவகார அமைச்சின் கொன்சூலர் பிரிவினரால் சான்றுப்படுத்தப்பட்ட மரணச் சான்றிதழ்.

### சகல விண்ணப்பதாரிகளாலும் முன்னளிக்கப்பட வேண்டிய பொதுவான ஆவணங்கள்

☐ 1. அங்கத்தவரது மரணச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி (மரணச் சான்றிதழில் பெயர் பிழையாகக் குறிப்பிடப்பட்டிருந்தால், உரிய அலுவலகத்தினால் பெயர் திருத்தப்பட வேண்டும்).

☐ 2. 18 வயதுக்கு மேற்பட்ட சகல விண்ணப்பதாரிகளினதும் பெயரிலான "எல்" படிவங்கள்

☐ 3. "எல்" - 2" பத்திரம்

☐ 4. நன்மை பெறுபவர் 18 வயதிற்குக் குறைந்தவர் எனின், அவரது பாதுகாவலரால் கையொப்பமிடப்பட்ட "எல் - 3" பத்திரம்

☐ 5. நட்ட உத்தரவாதக் கடிதம்

☐ 6 தற்போது செயற்பாட்டிலுள்ள வங்கிக் கணக்கொன்றின் புத்தகத்தின் / கூற்றின், வங்கிக் கிளையால் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி (கணக்கிலக்கம், வங்கியின் பெயர், கிளையின் பெயர், கணக்கு வைத்திருப்பவரது பெயர் ஆகியன தெளிவாகக் காணப்படுதல் வேண்டும்).

☐ 7 தேசிய அடையாள அட்டையின் பிரதி

☐ 8 விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்கு வருகை தருகின்ற விண்ணப்பதாரியின் / அவரால் "அட்டோர்ணி" பத்திரத்தின் மூலம் அதிகாரமளிக்கப்பட்டவரது, சமீபத்தில் எடுக்கப்பட்ட, கடவுச்சீட்டுக்குரிய அளவிலுள்ள வர்ணப் புகைப்படம்

(விவாக / பிறப்புச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்படும்போது மூலப் பிரதியுடன் சேர்த்து புகைப்படப் பிரதியும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்)

விசேட சந்தர்ப்பங்கள்

A B H படிவங்கள் பூர்த்திசெய்யப்பட்டுப் பதிவுசெய்யப்பட்டிருக்காத சந்தர்ப்பத்தில் பணிபுரிந்த நிறுவனம் / நிறுவனங்கள் மூடப்பட்டிருந்தால் அவ்வாறான ஒவ்வொரு நிறுவனத்திலும் பணிபுரிந்தமையை உறுதிப்படுத்துவதற்காக ஏதாவது எழுத்து மூலமான ஆவணமொன்று சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் (அதாவது, நியமனக் கடிதம், சேவையை முடிவுறுத்தியமைக்கான கடிதம், சம்பளப் பட்டியல் போன்றன)

செல்லுபடியான பின்னுரித்தாளர் இருக்கும்போது சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஏனைய ஆவணங்கள்

☐ 1. பின்னுரித்தாளர வாழ்க்கைத்துணைவராயின், விவாகச் சான்றிதழ்

☐ 2. பின்னுரித்தாளர் பிள்ளை அல்லது சகோதரர் / சகோதரி ஆயின், அவரது பிறப்புச் சான்றிதழ்

☐ 3. பின்னுரித்தாளர் தாய் அல்லது / அத்துடன் தந்தை ஆயின், அங்கத்தவரது பிறப்புச் சான்றிதழ்

பின்னுரித்தாளர் இல்லாதபோது அல்லது பின்னுரித்தாளராகப் பெயரிடப்பட்டவர் செல்லுபடியாகாத நிலையில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஏனைய ஆவணங்கள் (அங்கத்தவர் விவாகஞ் செய்திருந்தால்)

☐ 1. விவாகச் சான்றிதழ்

☐ 2. பிள்ளைகள் அனைவரதும் பிறப்புச் சான்றிதழ்கள்.

அங்கத்தவர் விவாகஞ் செய்திராதபோது அல்லது விவாகத்தின் பின்னர் பிள்ளைகள் எவரும் இல்லையாயின்.

அவரது வாழ்க்கைத்துணையின் மற்றும் அவரது பெற்றோர் இருவரதும் "எல்" படிவத்துடன் பின்வரும் ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

☐ 1. விவாகச் சான்றிதழ்

☐ 2. விவாகஞ் செய்யாதவராயின், அங்கத்தவரது பிறப்புச் சான்றிதழுடன் அவர் விவாகஞ் செய்யாதவர் என்பதைக் குறிக்கும் கிராம உத்தியோகத்தரது சான்றிதழ்.

☐ 3. அவரது பெற்றோர் / சகோதர சகோதரிகள் மரணமடைந்திருப்பின், அவ்வாறு மரணமடைந்தோரது மரணச் சான்றிதழ்கள்.

☐ 4. 18 வயதுக்குக் குறைவான சகோதர சகோதரிகள் இருப்பின், அவர்களது பாதுகாவலராக உள்ளவர் கையொப்பமிட்ட "எல் - 3" படிவங்கள்

☐ 5. சகோதர சகோதரிகளது பிறப்புச் சான்றிதழ்கள்

விண்ணப்பிப்பவர் வெளிநாடு சென்றிருந்தால், விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க வேண்டிய விதம்

☐ 1. வெளிநாட்டுப் பிரசாவுரிமை கிடைத்திருந்தால், எல்லாப் ஆவணங்களும் அவர் இருக்கும் நாட்டிலுள்ள இலங்கைத் தூதரக அலுவலரால் சான்றுப்படுத்தப்பட்டு, அவரது கடவுச்சீட்டு, வீசா ஆகியவற்றின் பிரதிகளுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

☐ 2. அவ்வாறு சான்றுப்படுத்தப்பட்ட விண்ணப்பம், இந்த நாட்டில் வதியும் ஒருவரூடாகச் சமர்ப்பிக்கப்படுமாயின், அவருக்கு விண்ணப்பதாரியால் வழங்கப்பட்ட "அட்டோர்ணி" ஆவணம் இருத்தல் வேண்டும்.

☐ 3. வெளிநாட்டிலுள்ள விண்ணப்பதாரியின் வெளிநாட்டு வங்கிக்கணக்கிற்கு நன்மைக் கொடுப்பனவு செல்ல வேண்டுமாயின், வங்கியின் பெயர், வங்கிக் கணக்கின் பெயர், கணக்கு இலக்கம், Bank Code, City ஆகியன உள்ளடங்கிய வங்கிக் கூற்று அல்லது வங்கியிலிருந்து பெறப்பட்ட கடிதம் விண்ணப்பத்துடன் சேர்த்துச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

☐ 4. தற்காலிகமாக வெளிநாட்டில் இருந்தால், அவர்நாட்டிற்கு மீண்டும் திரும்பிய பின்னரே விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து நன்மைக் கொடுப்பனவைப் பெற முடியும்.

விண்ணப்ப படிவத்துடனான ஆவணங்கள் எல்லாவற்றினதும் தொகுதி உங்களது "எல் - 2" படிவம் சான்றுப்படுத்தப்பட்ட பிரதேசத்தின் பிராந்திய தொழில் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இங்ஙனம்,
தங்கள் உண்மையுள்ள,

தொழில் ஆணையாளருக்காக